மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதிலே துணைக் கேள்வியைக் கேளுங்கள். நீங்கள் உங்களுடைய ஊரைப் பற்றிய எல்லாவற்றையும் பற்றிக் கேட்டால் எப்படிப் பதிலளிக்க முடியும்? மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் தொகுதியின்பால் அன்பு கொண்ட காரணத்தால் கோரிக்கைகளை பலவாறு அடுக்கிக் கொண்டே செல்கிறார்கள். அது உள்ளாட்சித் துறைக்குச் சம்பந்தப்பட்ட கோரிக்கையாக இருந்தாலும்கூட ஆதிதிராவிடர் மக்களுக்காகக் கேட்கிற கேள்வி அது. ஆகவே, இதய தெய்வம் தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இந்த ஆண்டு 50 ஆயிரம் தொகுப்பு வீடுகள் கட்டப்படவேண்டுமென்று ஆணையிட்டிருக்கிறார்கள். அதன் அடிப்படையில் வீடுகள் கட்டப்படும். இருப்பினும் நமது உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் எங்கள் மாவட்டத்திற்கு வருகை தந்தபோது, துறையை ஆய்வு செய்தபோது, அவர்கள் அரசு அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்கள். முதற்கட்டமாக இதுவரையில் தொகுப்பு வீடுகள் கட்டாத ஆதிதிராவிட குடியிருப்புகள் முன்னுரிமைப் பட்டியலுக்கு எடுத்துக்கொள்ளவேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அந்த அடிப்படையில் பார்க்கிறபோது சட்டமன்ற உறுப்பினர் சொல்லுகின்ற கிராமத்திற்கு ஏற்கனவே 25 வீடுகள் அளித்து இருக்கிறார்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, அது சாத்திய கூறு இல்லை. இருந்தாலும் சம்பந்தப்பட்ட துறை அமைச்சரிடம் அவர் கேட்டுப்பெறலாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 200, டாக்டர் பெ. வீரபாண்டியன், மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர்.

200—

செங்கம் தொகுதியில் மண்பாண்ட அலகு ஏற்படுத்த ஆய்வு

* **36640—***டாக்டர் பெ. வீரபாண்டியன்:*

மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கம் தொகுதியில் மண்பாண்ட அலகு ஏற்படுத்தும் அளவுக்கு மூலப்பொருட்கள் எளிமையாக கிடைப்பதை அரசு ஆய்வு செய்துள்ளதா?

1995 ஏப்ரல் 3]

மாண்புமிகு திரு. பி. ஈஸ்வரமூர்த்தி, கதர்த் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

செங்கம் தொகுதியில் மண்பாண்ட அலகு ஏற்படுத்தும் அளவுக்கு அதிக மூலப்பொருட்கள் எளிமையாக கிடைக்கவில்லை. எனவே, செங்கம் தொகுதியில் மண்பாண்ட அலகு ஏற்படுத்தும் கருத்துரு எதுவும் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் பரிசீலனையில் இல்லை.

பிற்பகல் 11-20

டாக்டர் பெ. வீரபாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கம் ஒன்றியத்தில் மேல் செங்கம் கிராமத்தில் கிட்டத்தட்ட 12 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் மத்திய, மாநில பண்ணை அமைந்திருக்கிறது. பெரும்பாலும் அங்கே தோட்டக்கலை மிகவும் சிறப்பாக செயல்பட்டுக் கொண்டு வருகிறது. மாதத்திற்கு கிட்டத்தட்ட ஆயிரக்கணக்கான பூந்தொட்டிகளும் மண்பாண்டத்தில் தயாரிக்கும் பல அமைப்புக் கொண்ட மண்பாண்டப் பொருட்களும் அங்கே தேவைப்படுகின்றன. பக்கத்து மாநிலங்களிலே இருந்துதான் அதைப் பெறுகிறார்கள். எனவேதான் செங்கம் தொகுதியிலுள்ள விவசாயத் தொழிலாளிக்கு ஒரு உப தொழிலாக அங்கே மண்பாண்ட அலகு வேண்டுமென்று கேட்டு இருக்கிறேன். தயவுசெய்து அதை மீண்டும் பரிசீலனை செய்ய வேண்டும். சமூக நலக் காடுகளுக்காக, அந்த நர்சரிகளுக்கு தொட்டிகளும், அதேபோல வனத் துறையிலும் நர்சரிக்கு தொட்டிகள் தேவைப்படுகின்றன. எனவே இதை மீண்டும் மறு பரிசீலனை செய்து, அங்கே ஒரு 'மண்பாண்ட அலகை' ஏற்படுத்திக் கொடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன் வருவாரா எனக் கேட்க விழைகிறேன்.

மாண்புமிகு திரு. பி. ஈஸ்வரமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு இடத்தில், ஒருசில துறைகளுக்காக, நிறுவனங்களுக்காக அந்தத் தொட்டிகள் தேவைப்படும் என்ற நோக்கத்தோடு ஒருசில அலகுகள் ஆரம்பிக்கக்கூடிய நிலை இல்லை. ஏனென்று கேட்டால், ஏற்கெனவே கதர் கிராமத் தொழில் வாரியத்தின் மூலம் அந்த மண்பாண்டத் தொழிலை மானாமதுரை, குற்றாலம் போன்ற பகுதிகளில் மிக நல்லமுறையிலே நாங்கள் நடத்திக் கொண்டு வருகிறோம். அங்கு உற்பத்திச் செய்யக்கூடிய அனைத்து மட்பாண்டங்களில் ஆண்டு முழுவதும் 25 சதவீதம்கூட விற்பனை செய்ய முடியாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. இந்த நவீன காலத்திலே மட்பாண்டங்களையும் தொட்டிகளையும் அதிகமான அளவிலே மக்கள் பயன்படுத்துவதில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் அறிவார்கள். ஆகவே, செங்கம்

தொகுதியினுடைய மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்துருவைப் பரிசீலிக்கும் வாய்ப்பு இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

டாக்டர் பெ. வீரபாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'பரித்ராணாய சாதூனாம் விநாசாய ச
துஷ்க்ருதாம் தர்ம சம்ஸ்தாபனார்த்தாய
சம்பவாமி யுகே யுகே'

"தர்மத்தின் வாழ்வுதனை சூது கவ்வும்
தர்மம் மீண்டும் வெல்லும்".

வென்றே தீரும். (மேசையைத் தட்டும் ஒலி) பூனைகளின் சீற்றம், திருட்டை விரும்பும் குருட்டு கோட்டான்களின் கூச்சல்...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: துணைக் கேள்வியைக் கேளுங்கள்.

டாக்டர் பெ. வீரபாண்டியன்: எதற்கும் பின்வாங்காத லட்சியப் பயணத்தை மேற்கொண்டு இருக்கும் நம்முடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவியின் ஆட்சிக் காலத்தில் (மேசையைத் தட்டும் ஒலி) நீப்பத்துறை, காஞ்சி, பெரியகோலப்பாடி, சின்னகோலப்பாடி ஆகிய இடங்களில் அந்தவகை மண்கள் இருக்கின்றன என்று தெரிய வருகிறது. அதைத் தங்களுடைய துறை ஆய்வு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளுமா எனக் கேட்க விழைகிறேன்.

மாண்புமிகு திரு. பி. ஈஸ்வரமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மட்பாண்டம் செய்வதற்குத் தேவையானது களிமண்தான். அது எல்லா இடங்களிலும் எல்லா காலகட்டத்திலும் கிடைக்கிறது. அதை அனைவரும் அறிவோம். ஆனால் செங்கம் தொகுதியிலே ஒரு மட்பாண்ட அலகு அமைக்கப்பட வேண்டுமானால் அந்த அலகிலே கிட்டத்தட்ட குறைந்தபட்சம் 25 பேர்களாவது, உறுப்பினர்களாவது வேண்டும். அந்த அளவுக்கு பெரிய அளவிலே செய்வதற்கு வாய்ப்பு இல்லாமல் இருக்கிறது. இருந்தாலும்கூட, தனி நபர்கள் முன்வந்தால் அவர்களுக்கு வாரியத்தின் மூலம் நிதியுதவி கொடுக்கப்பட்டு அந்தத் தொழிலை நாம் ஊக்குவிப்பதற்குத் தயாராக இருக்கிறோம் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொண்டு, யாராவது தனி நபர்கள் இதற்கு முன் வந்தால் அவர்களுக்குப் பரிந்துரை செய்தால், விண்ணப்பதாரர் விண்ணப்பத்தைப் பரிசீலித்து தகுதியானவர்களுக்கு

1995 ஏப்ரல் 3]

நிதியுதவி கொடுக்க வாரியம் ஏற்பாடு செய்யும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

186—

திருவாரூர் ஒன்றியத்தில் பாலத்தை அகலப்படுத்த நடவடிக்கை

* **20002**—திரு வே. தம்புசாமி:

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாரூர் ஒன்றியம், சேமங்களத்தையும், காக்கழனியையும் இணைக்கும் பாலம் குறுகலாக இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், பாலத்தை அகலப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப் பணித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) தற்போது திட்டம் எதுவும் இல்லை.

197—

பெரிய நெகமம் வாரச் சந்தையைப் பொது ஏலத்தில் விடுதல்

* **10156**—திரு. நா. சா. பழனிசாமி:

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிணத்துக்கடவு தொகுதி, பெரிய நெகமம் வாரச் சந்தையை பேரூராட்சிக்கு வருமானம் கிடைக்கும் வகையில் தனியார் பொறுப்பிலிருந்து விடுவித்து பொது ஏலத்தில் விடும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?